بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்த துஆக்கள் மேலும் ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த துஆக்களை செய்யுமாறு வழிகாட்டல்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15 ஜுன் 2018** அன்று ஆற்றிய **ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், அவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆவின் முக்கியத்துவத்தைப் பற்றி குறிப்பிடும் போது கூறினார்கள். ஜுமுஆவில் ஒரு நேரம் வருகிறது. அந்த நேரத்தில் ஒரு முஸ்லிம் தொழுகையில் துஆ செய்தால் அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவர் என்ன நன்மையை வேண்டுகிறாரோ அதை அவன் அவர்களுக்கு வழங்குகின்றான்.

இதை தெளிவுபடுத்தும் வகையில் ஒரு சிலர் கூறுகின்றனர். ஜுமுஆவின் குத்பாவும் கூட தொழுகையின் ஒரு பகுதியே ஆகும். எனவே துஆ ஏற்றுக் கொள்ளப்படும் அந்த நேரங்களில் அந்த நேரமும் அடங்கும்.

எவ்வாறிருப்பினும், ஜுமுஅவின் நாளிற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தலேயொழிய ஒவ்வொரு வயது வந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் அந்த தொழுகையை தொழுவது அவசியமாக்கப்பட்டுள்ளது.

தொழுகையில் ஒவ்வொருவரும் அவரவரது சிந்தனைகள் மற்றும் தேவைகளுக்கேற்ப துஆ செய்கின்றனர். சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் தொழுகின்றார்கள். ஆனால் துஆ செய்வதற்கான சிறப்பான தூண்டுதல்கள் எதுவும் அவர்களிடம் இருப்பதில்லை. ஏதோ தொழுது விட்டோம். அதில் சொல்லப்பட்டுள்ள வாசகங்களை ஓதி விட்டோம் என்று இருந்து விடுகின்றனர். அவர்களுக்கு துஆவின் முக்கியத்துவம் தெரிவதில்லை.

எனவே இன்று ரமலானின் கடைசி ஜுமுஆவில் நான் சில துஆக்களை கூறலாம் என்று நினைக்கின்றேன். அதன் மூலம் துஆ என்றால் என்ன? மேலும் அதன் முக்கியத்துவம் என்ன என்று விளங்குவதற்காகவும், மேலும் ஜமாஅத் அளவில் நம்முடைய துஆக்களையும் எண்ணங்களையும் இறைவன் முன் எடுத்து வைப்பதற்காக அதை கூறலாம் என்று நினைத்தேன். தொழுகையில் இந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக சிறப்பான முறையில் துஆ செய்யுங்கள். இந்த துஆக்களில் நான் திருக்குர்ஆனிலிருந்து சில துஆக்களை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சில துஆக்களை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சில துஆக்களும், இன்னும் சில பொதுவான துஆக்களும் இதில் அடங்கியுள்ளன.

சில குர்ஆனிய மற்றும் சுன்னத்தான துஆக்களை நான் கூறும் போது யாருக்கு அவை நினைவில் உள்ளதோ அவர்கள் அதை திரும்ப கூறுக. அல்லது உள்ளத்தில் அதை ஓதவும். நான் கூறுவதற்கு ஆமீன் என்று கூறவும். அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக் கொள்வானாக.

سبحان اللہ وبحمدہ سبحان اللہ العظیم اللھم صل علی محمد و آل محمد

இவை திருக்குர்ஆனின் துஆக்களாகும்:

رَبَّنَآ اٰتِنَا فِی الدُّنۡیَا حَسَنَۃً وَّفِی الۡاٰخِرَۃِ حَسَنَۃً وَّقِنَا عَذَابَ النَّارِ

எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. (2:182)

رَبَّنَآ اَفۡرِغۡ عَلَیۡنَا صَبۡرًا وَّتَوَفَّنَا مُسۡلِمِیۡنَ

எங்கள் இறைவா! எங்களுக்கு பொறுமையினை இறக்குவாயாக. மேலும் (உனக்கே) கட்டுப்பட்டவர்களாக நாங்கள் இருக்கின்ற நிலையில் எங்களுக்கு மரணத்தை தந்தருள்வாயாக.

رَبَّنَآ أَنزِلْ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ ٱلسَّمَآءِ تَكُونُ لَنَا عِيدًا لِّأَوَّلِنَا وَءَاخِرِنَا وَءَايَةً مِّنكَ ۖ وَٱرْزُقْنَا وَأَنتَ خَيْرُ ٱلرَّٰزِقِينَ

அல்லாஹ்வே! எங்கள் இறைவனே! எங்களுள் முன்னவர்க்கும், எங்களுள் பின்னவர்க்கும் பெருநாளாக (அமைவதற்காக)வும், உன்னிடமிருந்துள்ள ஓர் அடையாளமாகவும் இருக்கக்கூடிய (உணவுகள் நிரம்பிய) தட்டை வானிலிருந்து எங்களுக்கு இறக்கி வைப்பாயாக. (5:115)

رَّبَّنَآ إِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُنَادِى لِلْإِيمَٰنِ أَنْ ءَامِنُوا۟ بِرَبِّكُمْ فَـَٔامَنَّا ۚ رَبَّنَا فَٱغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّـَٔاتِنَا وَتَوَفَّنَا مَعَ ٱلْأَبْرَارِ

எங்கள் இறைவா! உங்கள் இறைவனிடத்து நம்பிக்கை கொள்ளுங்கள் என்று (கூறி) நம்பிக்கையின் பால் அழைக்கும் ஓர் அழைப்பவரின் குரலை நிச்சயமாக நாங்கள் செவியேற்றோம். எனவே, நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். (ஆகவே) எங்கள் இறைவா! நீ எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களிடமிருந்து அகற்றுவாயாக. எங்களை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக. (33:194)

رَبَّنَآ ءَامَنَّا بِمَآ أَنزَلْتَ وَٱتَّبَعْنَا ٱلرَّسُولَ فَٱكْتُبْنَا مَعَ ٱلشَّٰهِدِينَ

எங்கள் இறைவா! நீ இறக்கியதில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் இத்தூதரை பின்பற்றுகிறோம். எனவே நீ எங்களை உண்மைக்கு சாட்சி சொல்பவர்களுடன் எங்கள் பெயரை பதிவு செய்வாயாக. (3:54)

رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِن لَّدُنكَ رَحْمَةً ۚ إِنَّكَ أَنتَ ٱلْوَهَّابُ

எங்கள் இறைவா! எங்களுக்கு நேர்வழி காட்டிய பிறகு எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

رَبِّ هَبْ لِى مِن لَّدُنكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۖ إِنَّكَ سَمِيعُ ٱلدُّعَآءِ

எங்கள் இறைவா! நீ உன்னிடத்திலிருந்து எனக்கு தூய சந்ததிகளை வழங்குவாயாக. நிச்சயமாக நீ துஆக்களை அதிகமாக கேட்கக் கூடியவனாவாய்.

رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَٰجِنَا وَذُرِّيَّٰتِنَا قُرَّةَ أَعْيُنٍ وَٱجْعَلْنَا لِلْمُتَّقِينَ إِمَامًا

எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சியளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக. மேலும் இறையச்சமுடையவர்களுக்கு முதன்மையானவர்களாக ஆக்குவாயாக. (25:75)

رَبِّ أَوْزِعْنِىٓ أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ ٱلَّتِىٓ أَنْعَمْتَ عَلَىَّ وَعَلَىٰ وَٰلِدَىَّ وَأَنْ أَعْمَلَ صَٰلِحًا تَرْضَىٰهُ وَأَصْلِحْ لِى فِى ذُرِّيَّتِىٓ ۖ إِنِّى
تُبْتُ إِلَيْكَ وَإِنِّى مِنَ ٱلْمُسْلِمِينَ

எங்கள் இறைவா! நீ என் மீதும், என் பெற்றோர்கள் மீதும் பொழிந்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதற்கான நற்பேற்றை எனக்கு வழங்குவாயாக. நீ திருத்தியடையும் நல்ல செயல்களை செய்வதற்கான நற்பேற்றை வழங்குவாயாக. மேலும் எனது சந்ததிகளையும் நீ சீர்திருத்துவாயாக. நான் உன் பக்கமே குனிகின்றேன். எவ்வித சந்தேகமுமின்றி நான் கட்டுப்பட்டு நடப்பவனாவேன்.

رَبِّ هَبْ لِى مِنَ ٱلصَّٰلِحِينَ என்னுடைய இறைவா! நீ எனக்கு நல்லடியார்களை எனக்கு வாரிசாக்குவாயாக.

رَبِّ إِنِّى لِمَآ أَنزَلْتَ إِلَىَّ مِنْ خَيْرٍ فَقِيرٌ

என் இறைவா! நிச்சயமாக எனக்கு நன்மையிலிருந்து நீ எதை வணங்கினாலும் அதனை நான் இரப்பவனாக உள்ளேன். (28:25)

رَبِّ أَوْزِعْنِىٓ أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ ٱلَّتِىٓ أَنْعَمْتَ عَلَىَّ وَعَلَىٰ وَٰلِدَىَّ وَأَنْ أَعْمَلَ صَٰلِحًا تَرْضَىٰهُ وَأَدْخِلْنِى بِرَحْمَتِكَ فِى
عِبَادِكَ ٱلصَّٰلِحِينَ

நீ எனக்கும் எனது பெற்றோர்களுக்கும் செய்த உன் அருட்கொடைக்கு நான் நன்றி செலுத்துவதற்கும், நீ திருப்தியடையக்கூடிய பொருத்தமான செயலை நான் செய்வதற்கும் நீ எனக்கு வாய்ப்பளித்து உன் கருணையால் என்னை உன் அடியார்களுடன் சேர்ப்பாயாக. (27:20)

رَبِّ زِدْنِى عِلْمًا என் இறைவா! எனக்கு அறிவை வளரச் செய்வாயாக. (20:115)

رَبِّ اشْرَحْ لِي صَدْرِي - وَيَسِّرْ لِي أَمْرِي - وَاحْلُلْ عُقْدَةً مِّن لِّسَانِي - يَفْقَهُوا قَوْلِي

என் இறைவா! என் உள்ளத்தை விரிவுபடுத்துவாயாக. என் பணியை எனக்கு எளிதாக்குவாயாக. என் பேச்சிலுள்ள திக்கலை அகற்றுவாயாக. (அவ்வாறாயின்) அவர்கள் என் பேச்சை (எளிதாகப்) புரிந்து கொள்வர். (20:26–29)

رَبَّنَا آتِنَا مِن لَّدُنكَ رَحْمَةً وَهَيِّئْ لَنَا مِنْ أَمْرِنَا رَشَدًا

எங்கள் இறைவா! நீ எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக.மேலும் எங்களது விஷயத்தில் நேர்வழியை எளிதாக்கி தருவாயாக. (18:11)

رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا

என் இறைவா! நான் குழந்தையாக இருந்த போது என்னை வளர்த்தது போல் நீ எனது பெற்றோரிடம் கருணை காட்டுவாயாக. (17:25)

رَبِّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي فَاغْفِرْ لِي

எங்கள் இறைவா! நிச்சயமாக நான் எனது நஃப்ஸின் மீது அநீதியிழைத்து விட்டேன். ஆகவே என்னை மன்னித்தருள்வாயாக.

رَبَّنَا أَتْمِمْ لَنَا نُورَنَا وَاغْفِرْ لَنَا ۖ إِنَّكَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ

எங்கள் இறைவா! எங்கள் ஒளியை முழுமையாக்கி எங்களை மன்னிப்பாயாக. நிச்சயமாக நீ எல்லாவற்றிற்கும் பேராற்றல் உடையவனாவாய். நீ எதை விரும்புகின்றாயோ அதை செய்வதற்கு நிரந்தரமான ஆற்றல் உடையவனாவாய். (66:9)

رَبِّ اجْعَلْنِي مُقِيمَ الصَّلَاةِ وَمِن ذُرِّيَّتِي ۚ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَاءِ - رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ

என் இறைவா! என்னையும் என் சந்ததிகளையும் தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக ஆக்குவாயாக. எங்கள் இறைவா! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக. என் இறைவா! கேள்வி கணக்கு நிகழும் நாளில் எனக்கும் என் பெற்றோருக்கும் நம்பிக்கை கொண்டோர்கள் எல்லோருக்கும் நீ மன்னிப்பை வழங்குவாயாக. (14:41,42)

رَبَّنَا أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ

எங்கள் இறைவா! எங்களுக்கு சகிப்புத்தன்மையை தந்தருள்வாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. நிராகரிப்பவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (2:251)

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَإِسْرَافَنَا فِي أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ

எங்கள் இறைவா! எங்கள் பாவங்களையும், எங்களின் விவகாரங்களிலுள்ள வரம்பு மீறுதல்களையும் மன்னிப்பாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. நிராரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக.

رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلْقَوْمِ الظَّالِمِينَ - وَنَجِّنَا بِرَحْمَتِكَ مِنَ الْقَوْمِ الْكَافِرِينَ

எங்கள் இறைவா! அநீதியிழைக்கின்ற மக்களுக்கு எங்களை ஒரு சோதனையாக ஆக்காதிருப்பாயாக. உன் அருளின் மூலம் நிராகரிக்கின்ற மக்களிலிருந்து எங்களை காப்பாற்றுவாயாக.(10:86,87)

رَبِّ انصُرْنِي بِمَا كَذَّبُونِ என் இறைவா! அவர்கள் என்னை பொய்ப்படுத்துவதனால் நீ எனக்கு உதவி செய்வாயாக. (23:27)

ஹதீஸ் துஆக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னார் இந்த துஆக்களை கற்றுத் தந்துள்ளார்கள்.

அல்லாஹ்வே! என்னுடைய தவறுகளை மன்னிப்பாயாக. என்னுடைய எல்லா விவகாரங்களிலும் எனக்கு உதவி செய்வாயாக. என்னுடைய எல்லா விவகாரங்களையும் எனது அறியாமை மற்றும் அறிவீனம் மற்றும் எனது வரம்பு மீறுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பாயாக. அவற்றின் எல்லா நஷ்டங்களிலிருந்தும் பாதுகாப்பு வழங்குவாயாக. அவற்றை என்னை விட நீயே நன்றாக அறிந்தவன். அல்லாஹ்வே! எனது தவறுகளை மன்னிப்பாயாக. நான் தெரிந்தும் தெரியாமலும் கேலி செய்யும் விதத்தில் நடந்த தவறுகளையும் மன்னிப்பாயாக. என்னிடத்திலிருந்து வெளிப்பட்ட அல்லது வெளிப்படாத மற்றும் மறைவான முறையில் என்னிடமிருந்து வெளிப்பட்ட மற்றும் வெளிப்படையாகவே நான் செய்த அனைத்து தவறுகளையும் மன்னிப்பாயாக. நீயே முன்னேறச் செய்பவனும், பின் தங்கச் செய்பவனும் ஆவாய். நீயே எல்லாவற்றிற்கும் ஆற்றல் உடையவனாவாய்.

பிறகு அன்னார் செய்த இன்னொரு துஆ,

اللهم انی اعوذ بک من قلب لا یخشع ومن دعاء لا یسمع ومن نفس لا تشبع ومن علم یا ینفع اعوذبک من

هولاء الاربع.

அல்லாஹ்வே! நான் உன்னிடம் பணிவும், உருக்கமும் இல்லாத உள்ளத்திலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன். ஒப்புக் கொள்ளப்படாத துஆக்களிலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன். நஃப்ஸிலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன். பயன் தராத கல்வியிலிருந்தும் பாதுகாப்பு தேடுகின்றேன். இந்த நான்கு விஷயங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன்.

یا مقلب القلوب ثبت قلبی علی دینک

உள்ளங்களை புரட்டுபவனே என்னுடைய உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலைத்திருக்கச் செய்வாயாக.

اللهم انی اسئلک الهدی و التقی و العفافة و الغناء.

அல்லாஹ்வே! நான் உன்னிடம் நேர்வழி, இறையச்சம், மன்னிப்பு மற்றும் தன்னிறைவை வேண்டுகிறேன்.

اللهم انا نجعلک فی نحورهم ونعوذبک من شرورهم

நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன்னுடைய திகிலை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக.மேலும் நாங்கள் அவர்களின் விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.

اللهم انی اسئلک حبک وحب من یحبک والعمل الذی یبلغنی حبک اللهم اجعل حبک احب الی من

نفسی واهلی ومن الماء البارد.

என்னுடைய அல்லாஹ்வே! நான் உன்னிடம் உன்னுடைய அன்பை வேண்டுகின்றேன். உன்னை நேசிக்கின்றவர்களின் அன்பையும் வேண்டுகின்றேன். மேலும் உன்னுடைய அன்பை பெற்றுத் தருகின்ற பணியை வேண்டுகின்றேன். என்னுடைய இறைவா! உன்னுடைய அன்பு எனக்கு என்னுடைய உயிர், குடும்பம், குளிர்ந்த தண்ணீர் ஆகியவற்றை விட அதிகமாக அன்பிற்குரியதாக ஆக்கி வைப்பாயாக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய துஆக்களை கூறுகின்றேன். அன்னார் தனது ஓர் சஹாபிக்கு தான் எழுதிய கடிதத்தில் இந்த துஆவை குறிப்பிடுகின்றார்கள். அந்த துஆ இதுவாகும்.

یا من هو احب من کل محبوب اغفرلی وتب الی وادخلنی فی عبادک المخلصین

சவுத்ரி ருஸ்தம் அலி சாஹிபிற்கு இது எழுதப்பட்டிருந்தது. அதாவது எல்லா அன்பிற்குரியவர்களை விடவும் அதிகமாக அன்பு காட்டத் தகுந்தவனே என்னை மன்னிப்பாயாக. என்மீது அருள் புரிவாயாக. உன்னுடைய களங்கமற்ற அடியார்களோடு என்னை சேர்ப்பாயாக.நாங்கள் உன்னுடைய பாவம் மிகைத்த அடியார்கள் மற்றும் மன இச்சைகளால் மிகைத்தவர்கள் ஆவோம். நீ எங்களை மன்னிப்பாயாக. மறுமையின் துன்பத்திலிருந்து எங்களை பாதுகாப்பாயாக.

இறைவனில் மாய்ந்து விடுவதற்கான துஆவை அன்னார் கற்றுத் தந்துள்ளார்கள்.

எல்லா உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவனே! நான் உன்னுடைய கருணைக்கு நன்றி செலுத்த முடியாது. நீ மிகவும் கருணை காட்டுபவனும் கண்ணியமானவனும் ஆவாய். உன்னுடைய அளவில்லாத அருட்கள் என்மீது இருக்கின்றன. என்னுடைய பாவங்களை மன்னிப்பாயாக. என்னை அழித்து விடாதிருப்பாயாக. என் உள்ளத்தில் உன்னுடைய களங்கமற்ற அன்பை போடுவாயாக. அதன் மூலம் எனக்கு வாழ்வு கிடைக்க வேண்டும். மேலும் என்மீது திரையிடுவாயாக. எனக்கு நீ விரும்பத்தக்க நற்செயலை வழங்குவாயாக. நான் உன்னுடைய கண்ணியமிக்க பொலிவுகள் மூலமாக உன்னுடைய கோபம் என்மீது வெளிப்படுவதிலிருந்து பாதுகாப்பு தேடுகின்றேன். என்மீது கருணை மீது கருணை காட்டுவாயாக. உலகம் மற்றும் மறுஉலகின் தொல்லையிலிருந்தும் காப்பாயாக. ஏனென்றால் எல்லா வகையான அருள்களும் கண்ணியங்களும் உன் கையிலேயே இருக்கின்றன. ஆமீன்

இப்போது பொதுவாக நாம் இஸ்லாமிய உலகை துஆவில் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் தஆலா அவர்களுக்கு ஒருமைப்பாட்டை வழங்குவானாக. மேலும் பிரிந்துள்ள அவர்களது உள்ளங்கள் இணையட்டுமாக. தமக்கிடையே உள்ள பகைமைகள் முடிவுக்கு வரட்டுமாக. பகைமையிலிருந்து பயன் பெற்றுக் கொண்டிருக்கின்ற எதிரிகளின் கைகளை அல்லாஹ் தடுப்பானாக.

அல்லாஹ் தஆலா எல்லா அஹ்மதி ஆண் பெண்களுக்கும் தன்னிறைவை வழங்குவானாக. எல்லா விஷமங்களிலிருந்தும் அவர்களை பாதுகாப்பானாக. அவர்களுக்கு உறுதியான பாதத்தை வழங்குவானாக. அவர்கள் எப்போதும் ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத் அமைப்போடு இணைந்திருப்பார்களாக.

அல்லாஹ் நம்மை தஜ்ஜாலின் குழப்பங்களிலிருந்தும் அவனுடைய விஷமத்திலிருந்தும் பாதுகாப்பானாக. அல்லாஹ் தஆலா அஹ்மதிய்யத்திற்காக உயிர் தியாகம் செய்தவர்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்களுடைய உறவினர்களில் அவர்களுக்கு பின்னால் இருக்கக்கூடியவர்களுக்கு அவனே பாதுகாப்பு வழங்குவானாக. இறைவ வழியில் கைதானவர்களுக்கு விரைவில் விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக.

காதியானில் வசிக்கக்கூடிய மக்கள் என்னென்ன சிரமங்களில் இருக்கின்றார்களோ அவர்களையும், பாகிஸ்தானில் உள்ளவர்களையும் குறிப்பாக ரப்வாவிலுள்ளவர்கள் அவர்களை அவர்களுடைய நிலைமைகள் இந்த காலத்தின் அரசாங்கத்தால் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். நெருக்கடிக்கு மேல் நெருக்கடி தருவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அல்லாஹ் அவர்களை அநீதியிழைப்பவர்களிடமிருந்து பாதுகாப்பானாக. அவர்களின் நிலைமைகளை மேம்படச் செய்வானாக.

யமனில் இப்போது கடுமையான தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன. ஈராக்கிலும் சிரியாவிலும் கோஷ்டிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் மற்றும் பிரிவுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அதனால் முஸ்லிம்கள் முஸ்லிம்களின் கழுத்துக்களையே வெட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் பெருமானார் (ஸல்) அவர்களது உண்மையான போதனைகளின்படி அமல் செய்வதற்கான நற்பேற்றை வழங்குவானாக.

அவ்வாறே அல்லாஹ் ஜமாஅத்தின் பல்வேறு திட்டங்கள் மற்றும் ஜமாஅத் சந்தாக்களில் பொருள் தியாகம் செய்தவர்களுடைய செல்வத்திலும் பொருளிலும் பரக்கத்தை வழங்குவானாக.

அதே போன்று ஜமாஅத்தின் சேவகர்களில் M.T.A மிகவும் அதிகமாக பணி செய்கின்றது. அல்லாஹ் M.T.A வின் பணியாளர்களுக்கு மற்றும் தன்னார்வலர்களுக்கும் நற்கூலி வழங்குவானாக. முன்பை விட அதிகமாக பணி செய்யக்கூடிய வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக.

**மொழியாக்கம் : முஅல்லிம் நிஸாமுத்தீன்**